விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்–11.10 a.m.
விசாரணை முடிக்கப்பட்ட நேரம் –11.50 a.m.

**DEPOSITION OF WITNESS**
**In the Court of Judicial Magistrate No.I, Mettur**
**Case No : CC.No.100/2024**

**Prosecution side witness : அ.சா.9** **Date :** 24.03.2025

| | |
|---|---|
| Name : அசோகன் | Taluk : சேலம் |
| Father Name : பழனியப்பன் | Calling : உதவி ஆய்வாளர் |
| Village : நாராயணபிள்ளைதெரு | Age : 60 |

(A1 and A3 present. A2 and A4 absent. Filed petition and allowed)

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 15.02.2023 ம் தேதி முன்னதாக கிடைக்கப்பெற்ற ஓமலூர் அரசு மருத்துவமனையிலிருந்து தகவலின் பேரின் 19.02.2023 ம் தேதி 15.00 மணிக்கு நிலைய அலுவலலில் இருந்த முதல்நிலைக்காவலர் 2181 கலையரசன் என்பவரை ஓமலூர் அரசு மருத்துவமனைக்குக் அனுப்பி வைத்து அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த சேட்டு நேரில் பார்த்து விசாரித்து அவர் சொன்ன வாக்குமூலத்தை பதிவு செய்து என்னிடம் அன்றே 14.00 மணிக்கு ஆஜர் படுத்தியதை பார்வையிட்டு நிலைய மனு ரசீது எண்.25/2023 ஆக 19.02.2023 தேதி பதிவு செய்தேன். சம்பவத்தை சம்பவம் இடம் சென்று விசாரிக்க சென்றபோது எதிரிகள் தலைமறைவாக இருந்ததாலும் புகார்தாரர் மருத்துவமனையிலும் உள்நோயாளிகாக இருந்தாலும் மனுவை விசாரிக்க இயலவில்லை. ஆகவே இம்மனுவை விசாரணைக்காக வேண்டி பார்வையிட்டு 24.02.2023 ம்

தேதி காலை 10.00 மணிக்கு குற்ற எண்.47/2023, ச.பி.294(பி), 324, 506(1) இ.த.ச. கீழ் வழக்கு பதிவு செய்தேன். **(மனுரசீது மற்றும் முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.4 மற்றும் 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

2) முதல் தகவல் அறிக்கையின் அசலுடன் வாதியின் புகாருடன் இணைத்து கனம் நீதித்துறை நடுவர் எண்.1 மேட்டுர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பிவைத்து வழக்கினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். 24.02.2022 ம் தேதி காலை 11.00 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் மோடி மாணிக்கம், செந்தில் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரிவரைபடம் தயார் செய்தேன். **(பார்வை மகசர் அ.த.சா.ஆ.6, மாதிரி வரைபடம் அ.த.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3) பின்னர் சாட்சிகள் வாதி சேட்டு, மற்றும் சேட்டு, நாகராஜ், பழனிவேல், சுப்பிரமணி, மோடி மாணிக்கம், செந்தில் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 27.02.2023 ம் தேதி ரகசிய தகவலின் பேரில் இவ்வழக்கின் எதிரிகள் 4 பேரையும் பெரியசோரகை கிராமட், சீரங்கனூர் வாதியின் வீட்டிற்கு முன்பு வைத்து மதியம் 12.00 மணிக்கு கைதுக்கான காரணத்தை கூறி கைது செய்து அவருடைய உறவினர்களுக்கு முறைப்படி தகவல் தெரிவிக்கப்பட்டு மதியம் 12.30 மணிக்கு காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து திரேக சோதனை செய்து நிலைய பாராவசம் ஒப்படைத்தேன். அன்றைய தினமே மேற்கண்ட எதிரிகளை நிலைய ஜாமினில் அனுப்பி வைத்தேன்.

4) பின்பு இறுதியாக 27.06.2023 ம் தேதி ஓமலூர் அரசு மருத்துவமனை மருத்துவர் அளித்த கொடுங்காயம் எனச் சான்றிதழ் அளித்த மருத்துவர் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். பின்பு 28.06.2023 ம் தேதி ஓமலூர் அரசு மருத்துவமனைக்குச் சென்று வாக்குமூலம் பெற்று வந்த முதல் நிலைக்காவலர் கலையரசன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு 28.06.2023 ம் தேதி இவ்வழக்கின் ச.பி.294(பி), 324, 506(1) இ.த.ச. விலிருந்து ச.பி.294(பி), 326, 506(1) இ.த.ச. வாக சட்டபிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தேன். **(சட்டபிரிவு மாறுதல் அறிக்கை அ.த.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

5) இறுதியாக புலன் விசாரணை முடித்து 28.06.2023 ம் தேதி ச.பி.294(பி), 326, 506(1) இ.த.ச. இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

<u>எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

முதல் தகவல் அறிக்கையில் குற்ற நிகழ்வு நாள் 18.02.2023 ம் தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24.02.2023 ம் தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த நிலையில் 19.02.2023 ம் தேதி 15.00 மணிக்கு காவல் நிலைய முதல்நிலைக்காவலர் கலையரசனை அனுப்பி வாக்குமூலம் பதிவு செய்துள்ளது தவறு என்றால் சரியல்ல. காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்தது 24.02.2023 ம் தேதி என்றும் 19.02.2023 ம் தேதி சென்று விசாரித்தது பொய் என்றால் சரியல்ல. புகார்தாரர் சேட்டு எப்போது நல்ல நிலையில் இல்லை என்றும் மதுபோதையில் தகராறு செய்து எங்கள் நிலையத்தில் அவர் மீது நிறை முதல் தகவல் அறிக்கை உள்ளது என்றால் சரியல்ல. நான் விசாரித்த

கண்ணுற்ற சாட்சிகள் உட்பட அனைவரும் நீதிமன்றத்தில் இந்த மாதிரி சம்பவம் நடைப்பெறவில் என்று சொல்லியுள்ளார்கள் என்றால் சரியல்ல. அ.சா.1ம் சேட்டு 1ம் எதிரி மாணிக்கம் என்பவரும் உடன்பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். அவர்களுக்குள் நிலபிரச்சனை நீண்டநாட்களாக உள்ளது என்பதை விசாரித்து தெரிந்துக்கொண்டேனா என்றால் சரிதான். அ.சா.1 குடிபோதையில் கீழே விழுந்து அடிப்பட்டு அது சம்மந்தமாக மருத்துவனையில் இருந்து எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்து அதன் மீது சரியாக விசாரணை செய்யாமலும் சம்பவம் இடத்திற்கு செல்லாமலும் காவல் நிலையத்தில் இருந்துக்கொண்டு அ.சா.1க்கு சாதாகமாக செயல்பட்டு எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்து அதை முறையாக விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**விசாரணை முடிக்கப்பட்டது.**

**ஒம்/–அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர்.1,**
**மேட்டூர்.**